தி.மு.க. முன்னாள் அமைச்சர்

எஸ்.ரகுபதியின் வெற்றிக்கு எதிரான தேர்தல் வழக்கு!

உச்சநீதிமன்றம் தள்ளுபடி!

புதுடெல்லி, அக். 9 -

தி.மு.க. முன்னாள் அமைச்சர் ரகுபதி வெற்றிக்கு எதிரான வழக்கை சுப்ரீம்கோர்ட்டு தள்ளுபடி செய்து உத்தரவிட்டுள்ளது.

முன்னதாக ரகுபதியின் மனுவை ஏற்று த.வெ.க. வேட்பாளரின் தேர்தல் வழக்கை சென்னை ஐகோர்ட் நிராகரித்து உத்தரவிட்டிருந்தது.

திருமயம் தொகுதி

நடந்து முடிந்த சட்ட சபை தேர்தலில், புதுக் கோட்டை மாவட்டம், திருமயம் தொகுதியில் தி.மு.க. சார்பில் போட்டியிட்ட முன்னாள் அமைச்சர் ரகுபதி 1,492 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டார்.

த.வெ.க. மனு

அவரது வெற்றியை எதிர்த்து தவெக வேட்பாளர் சிந்தாமணி, சென்னை ஐகோர்ட்டில் தேர்தல் வழக்கு தாக்கல் செய்திருந்தார். இந்த வழக்கை நிராகரிக்கக் கோரி தி.மு.க. எம்.எல்.ஏ. ரகுபதி மனுத்தாக்கல் செய்திருந்தார்.

இந்த மனுவை விசாரித்த நீதிபதி ஜி.கே.இளந்திரையன், ரகுபதியின்



மனுவை ஏற்று த.வெ.க. வேட்பாளர் சிந்தாமணியின் தேர்தல் வழக்கை நிராகரித்து உத்தரவிட்டார்.

மனு தள்ளுபடி

இதனை எதிர்த்து சுப்ரீம் கோர்ட்டில் மேல்முறையீடு செய்யப்பட்டது. இந்நிலையில் மேல்முறையீட்டு மனுவை நீதிபதிகள் பிரசாந்த்குமார் மற்றும் ஸ்ரீசந்திர சேகர் அடங்கிய அமர்வு விசாரணை செய்தநிலையில், அந்த மனுவை நேற்று தள்ளுபடி செய்து உத்தரவிட்டது.

மும்மொழிக் கொள்கையா ?

இருமொழிக் கொள்கையா? த.வெ.க. அரசின் நிலைப்பாடு என்ன?

திராவிட வெற்றிக் கழகத் தலைவர் மல்லை சி.ஏ.சத்யா கேள்வி!

சென்னை, அக்.9-

திராவிட வெற்றிக் கழகத் தலைவர் மல்லை சத்யா விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

இந்தித் திணிப்பு குறித்து கேட்டால் எல்லா பூட்டுக்கும் ஒரே சாவி என்பதைப் போன்று எல்லா கேள்விகளுக்கும் ஒரே பதில் கடந்த ஆட்சி என்று மாக்கியவல்லி அரசியல் கருத்தியலை உள்வாங்கி பொறுப்பற்ற முறையில் பதில் சொல்லி வருகிறார்கள். த.வெ.க. அமைச்சர்கள் அதில் ஒன்று அரசு பொது மருத்துவ மனையில் நோயாளிகளுக்கு மாத்திரை வைத்து கொடுக்கும் பேப்பர் உறையில் காலை, மதியம், மாலை, இரவு என்று தமிழுக்கு அடுத்து இந்தியும் அடுத்து ஆங்கிலத்திலும் மும்மொழியில் அச்சாகி இருப்பது குறித்து சுகாதாரத் துறை அமைச்சர் அருண் குமாரிடம் கேள்வி எழுப்பினால் எல்லாவற்றுக்கும் காரணம் கடந்த ஐந்தாண்டுகால தி.மு.க. ஆட்சி. முன்னாள் முதலமைச்சர் தலைவர் தளபதியும் அப்போதைய சுகாதாரத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணி அவர்களும்தான் காரணம் என்று பொறுப்பற்ற முறையில் பதில் சொல்லி உள்ளார்.

மேற்கு மண்டலம் கோவை, திருப்பூர், ஈரோடு, கரூர் ஆகிய பகுதிகளில் வட இந்தியர்கள் அதிகமாக பணியாற்றுகின்றார்கள். எனவே



இந்தி மொழியில் அச்சடிக்கப் பட்டது என்று அரசு தரப்பில் நியாயம் கற்பிப்பார்களேயானால் வட இந்தியாவில் இருந்து பணியாற்றும் தொழிலாளர்கள் பெரும்பாலோர் இந்தி மொழி பேசாத மேற்கு வங்கம், அஸ்ஸாம், மணிப்பூர், மகாராட்டிர, ராஜஸ்தான் ஒரிசா போன்ற மாநிலத்தைச் சேர்ந்தவர்கள் தங்கள் தாய் மொழியில்தான் பேசுவார்கள். அதிலும் சிலருக்கு இந்தி மொழியை பேசத் தெரியுமே அன்றி படிக்கத் தெரியாது என்பதை சுட்டிக் காட்ட விரும்புகின்றேன்.

தி.மு.க. ஆட்சி முடிந்து த.வெ.க. ஆட்சி 10.05.2026 அன்று பதவி ஏற்று மாதங்கள் ஐந்து உருண்டோடி கொண்டு இருக்கிறது. இந்த ஐந்து மாத காலங்களாக சுகாதாரத் துறையில் என்ன நடக்கிறது என்று ஆய்வு செய்யாமல் கோமா நிலையில் இருந்தாரா சுகாதாரத்துறை அமைச்சர் அருண் குமார் என்று நாட்டு மக்கள் கேட்கிறார்கள். எப்பக்கம் வந்து புகுந்துவிடும் இந்தி எத்தனைப் பட்டாளம்

கூட்டிவரும் அற்பமென்போம் அந்த இந்திதனை அதன் ஆதிக்கம் தன்னைப் புதைத்திடுவோம் வாரீர். என்றும் மறுமலர்ச்சிப் பாதையில்...

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

தத்துவமேதை டி.கே.சீனிவாசன்

37வது ஆண்டு நினைவு வணக்கம்



தோற்றம் 14.11.1922

மறைவு 9.10.1989

என்றும் தங்கள் வழி நடக்கும்

டி.கே.எஸ்.இளங்கோவன், Ex. M.P., நளினி
(செய்தி தொடர்பு குழு தலைவர், தி.மு.க.)

டி.கே.எஸ்.மணிவண்ணன் குணபூஷணி

டி.கே.எஸ்.தமிழ்ச்செல்வி எஸ்.தமிழ்மணி

திருமதி கீதாலட்சுமி வில்லாளன்

திருமதி. மாதவி – ஜான் விஜய்,

திருமதி. இ.தரணி – எஸ்.ராகவேந்திரமூர்த்தி,

சீனிவாசன், மேகலா, பரிதி ஈசா,

சென்னை தரமணி டைடல் பார்க் அருகே

மெட்ரோ ரயில் பணியால் சாலையில் உருவான ராட்சத பள்ளம்!

பள்ளத்துக்குள் கவிழ்ந்த கார் – 2 பேர் காயம்!

சென்னை, அக்.9-

திருவான்மியூரில் மெட்ரோ பணி காரணமாக சாலையில் திடீர் பள்ளம் ஏற்பட்டு அவ்வழியே சென்ற கார் கவிழ்ந்தது. நல்வாய்ப்பாக ஓட்டுநர் உயிர் தப்பிய நிலையில், சம்பவம் குறித்து மெட்ரோ நிர்வாகம் விசாரணைக்கு உத்தரவிட்டுள்ளது.

சென்னை திருவான்மியூர் அருகே சாலையில் திடீரென விழுந்த பள்ளத்தில் கார் கவிழ்ந்த நிலையில் இந்த சம்பவம் தொடர்பாக விசாரணை நடத்தப்படும் என மெட்ரோ ரயில் நிர்வாகம் விளக்கமளித்துள்ளது.


திருவான்மியூர் டைடல் பார்க் அருகே ஓஎம்ஆர் சாலையில் தற்போது மெட்ரோ ரயில் பணிகள் நடைபெற்று வருகின்றன. அப்பகுதியில் உள்ள சாலையில் இன்று காலை சுமார் 10.45 மணியளவில் திடீரென பள்ளம் ஏற்பட்டது.

சென்னை மெட்ரோ ரயில் திட்டத்தின் 2ம் கட்டத்தில், 3வது வழித்தடத்திற்காக திருவான்மியூரில் இருந்து தரமணி நோக்கி சுரங்கம் தோண்டும் பணிகள் நடைபெற்று வரும் நிலையில், திருவான்மியூர் ஷாஃப்ட்டில் இருந்து சுமார் 30 மீட்டர் தொலைவில் இந்த சம்பவம் ஏற்பட்டுள்ளது. அப்போது அந்த வழியாக சென்ற கார் பள்ளத்தில் கவிழ்ந்தது. காரை ஓட்டி வந்தவர் அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பினார்.

பள்ளத்தில் விழுந்த காரும் மீட்கப்பட்டு ள்ளது. தற்போது பள்ளத்தை கான்கிரீட் மூலம் நிரப்பும் பணிகள் நடைபெற்று வருகின்றன. மேலும், சம்பவ இடத்தில் தேவையான பாதுகாப்பு மற்றும் தளப் பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

சம்பவம் தொடர்பாக தொழில்நுட்ப ரீதியான ஆய்வும் நடைபெற்று வருகிறது. மெட்ரோ ரயில் பணிகளின் காரணமாக சாலையில் பள்ளம் ஏற்பட்டதாக கூறப்படும் நிலையில் இந்த சம்பவம் தொடர்பாக விசாரணை நடத்தப்படும் என மெட்ரோ ரயில் நிர்வாகம் தெரிவித்துள்ளது.

13ம் ஆண்டு நினைவு அஞ்சலி



தோற்றம் 18.09.1937

மறைவு 09.10.2013

சேப்பாக்கம் க.சந்தானகிருஷ்ணன்

(22 ஆண்டுகள் தலைமை பொதுக்குழு உறுப்பினர் & 48 ஆண்டுகள் கிளை கழக செயலாளர்)

எங்கள் உயிரில் கலந்த உங்கள் நினைவுகளோடு...
தலைவர் தளபதி அவர்களின் வழியில் திராவிடத்தின் விழுதுகளாய்..

மகன்கள்	மருமகள்கள்	மகள், மருமகன்	பெயரன்கள்	பெயர்த்திகள்
ச.அம்மையப்பன்	புவனேஸ்வரி அம்மையப்பன்	ச.ரதி க.ராஜசேகர்	கலாநிதி ராஜா அம்மையப்பன்	ஷாலினி
ச.ராஜேந்திரன்	புவனேஸ்வரி ராஜேந்திரன்		நிரஞ்சன் ராஜசேகர்	ரோஷனி அஷ்வின்
ச.கலைச்செல்வன்	தனலட்சுமி கலைச்செல்வன்		அஷ்வின் ராஜேந்திரன்	காவ்யா
ச.மதிவாணன்	சுதா மதிவாணன்		ராகவ் ராதாகிருஷ்ணன்	அக்ஷயா
ச.கரிகாலன்	ஷர்மிளா கரிகாலன்			



ராதா சந்தானகிருஷ்ணன் நினைவு அறக்கட்டளை, சென்னை

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

ஆரணி கோ. வெற்றிவீரன்

அக்டோபர் 9 (2019)



1954ல் ஆரணி பேரூர்க் கழகம் துவங்கப்பட்டபோது, கழகத்தில் இணைந்து கழகப் பணியாற்ற துவங்கினார்.

மாவட்ட பிரதிநிதி, பொதுக்குழு உறுப்பினர், மாநில இலக்கிய அணி துணைச் செயலாளர் என பொறுப்புகள் வகித்தவர்.

'நம்நாடு' இதழில் துணை ஆசிரியராக பணியாற்றியதோடு, முரசொலியில் தொடர்ந்து கட்டுரைகள் எழுதியவர்.

கருப்புக் கொடி போராட்டம், கைலாசம் கமிஷன் எரிப்பு, இந்தி திணிப்பு எதிர்ப்பு, இலங்கைத் தமிழர் ஆதரவு போராட்டம் என தலைமை அறிவித்த அனைத்து போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

ஆயிரம் விளக்கு கிழக்கு பகுதி சிறுபான்மையினர் நல உரிமை பிரிவு துணை அமைப்பாளர் - மறைந்த

கழக முன்னோடி ஜான்சன் நினைவு போற்றும் நிகழ்ச்சி!

கழகத்தினருக்கு வட்டச் செயலாளர் கோ.யுவராஜ் வேண்டுகோள்!

சென்னை, அக். 9 -

சென்னை மேற்கு மாவட்டம், ஆயிரம் விளக்கு கிழக்கு பகுதி சிறுபான்மையினர் நல உரிமை பிரிவு துணை அமைப்பாளரும், 118 வது வட்ட தி.மு.க. 100 வது பாக முகவருமான ஜான்சன் அவர்கள் கடந்த மாதம் உடல் நலக்குறைவினால் இயற்கை எய்தினார் என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

அன்னாரின் நினைவு போற்றும் நிகழ்ச்சி இன்று (09.10.2026 - வெள்ளிக் கிழமை) காலை 10.30 மணி அளவில் சென்னை, மீர்சாகிப்பேட்டை, ஜானி ஜான் கான் சாலையில் உள்ள கிறிஸ்தவ தேவாலயத்தில் நடைபெறுகிறது.

எனவே சென்னை



மேற்கு மாவட்டம், ஆயிரம் விளக்கு கிழக்குப் பகுதி, 118 வது வட்டக் கழக நிர்வாகிகள், வட்டத்திற்குட்பட்ட மாவட்ட, பகுதி, அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் கழக முன்னோடிகள் அனைவரும் இந்நிகழ்ச்சியில் கலந்து கொள்ளுமாறு 118 வது வட்டக் கழகச் செயலாளர் கோ.யுவராஜ் கேட்டுக் கொள்கிறார்.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

மிசா கபடா ராஜி (கே. ராஜி)

அக்டோபர் 9 (2008)



திராவிடர் கழகத்தில் தந்தை பெரியாரின் சிறந்த தொண்டராக விளங்கியதால், 'கருப்புச்சட்டை வீரர்' என்று கழகத்தினரால் அன்பாக அழைக்கப்பட்டவர். தி.மு.க. துவக்கப்பட்டபோது, இராயபுரம் பகுதி 6வது வட்ட அவைத்தலைவராகவும், மாவட்டக் கழக பிரதிநிதியாகவும் இருந்தவர்.

1963ஆம் ஆண்டு மீனவர்கள் கடலில் திசைமாறி காணாமல் போனபோது, ராணா என்ற நேவி கப்பலில் சென்று தேடி கண்டுபிடிக்க உதவியாக இருந்தவர்.

பழவேற்காடு முதல் மாமல்லபுரம் வரை மீனவர்களுக்கு கூட்டுறவு அமைப்புகளை ஏற்படுத்தி, மீனவர் பெடரேசன் தலைவராகப் பணியாற்றியவர்.

கழகம் நடத்திய அறப்போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர். அவசரநிலையின் போது மிசா கைதியாக ஓராண்டு சிறையில் இருந்தவர்.

'ராஜி' என்று அன்பொழுக தலைவர் கலைஞர் அவர்களால் அழைக்கப்பட்டவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.